# வழிபாடு

முதல்வர் :

அதிதூதரான தூயமிக்கேலே! இறைவனின் அணியில் புகழ் மிக்கவரே! இறைவனின் தூதர்களின் தலைவா! இறைவனை எதிர்த்த பேய்யினங்களைப் பேரிடி போல முழங்கி எரிநரகில் தள்ளிய எந்தையே! இறைவன் திருவுளத்திற்கு ஏற்ப நடந்து, தாழ்ச்சியால் மாட்சி பெற்ற தூயவா! எம்மைப் பழிவாங்க எண்ணும் கூளிகளை துறத்தி எம்மைக் காத்தருளும். என்றும் எம்மை இறைவன் பிள்ளைகளாக வாழச் செய்தருளும்.

துணைவர் :

தூய மிக்கேல் அதிதூதரே!

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு : இறைவனுக்கு ஏவல் புரிந்து அவர் புகழ்பாடும் வானதூதர்களின் அணியின் தலைவரே!

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மு : இறைவன் சித்தத்திற்கு அமைந்து உயர்வு பெற்றவரே!

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மு : தாழ்ச்சியின் எடுத்துக்காட்டாக விளங்கிய தூதர் தலைவரே!

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மு : இறைவனுக்கு நிகர் யார்? என்று முழக்கம் செய்து போர் புரிந்த வீரரே!

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மு : லூஸிபரையும் அவனது தோழர்களையும் நித்தி நெருப்பில் தள்ளிய வீரரே!

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மு : விசுவாசிகளின் உறுதுணையான வானதூதரே!

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மு : பிசாசுகள் மனிதர் மேல் செய்யும் சூழ்ச்சிகளை தகர்த்தெறியும் வல்லமை மிக்க வீரரே!

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மு : துன்பங்களினின்று மக்களை கைதூக்கும் புனித தூதரே!

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

**செபிப்போமாக :**

அதிதூதரின் பாதுகாவலில் குழுமியிருக்கும் நாம், அவரது வேண்டுதலினால் நமக்கு வேண்டிய நலன்களைத் தாராளமாகப் பெற்றுக் கொள்ள அன்புக்கடவுளை மன்றாடுவாராக.

மு : இறைவன் தன் சுதனை அறிவித்தபோது, மனிதனாக் பிறந்த அவருக்கு சிரம் தாழ்த்திப் பணிந்து வணங்கிய புனித மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால் நாங்கள் இறைமகன் இயேசுவை விசுவாசித்து, எங்கள் வாழ்க்கையில் அவரை ஏற்று நல்வாழ்வு வாழ எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று – ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

து : ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு : பிசாசின் சோதனைகளால் துன்பப்படும் நாங்கள் அவைகளை முறியடித்து, வெற்றி முரசு கொட்டிய புனித மிக்கேல் அதிதூதரின் ஆணையால், ஆறுதலும், தைரியமும் அடைந்து, பிசாசினால் எங்களுக்கு வரும் இன்னல்களிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்று –

து : ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு : பிசாசின் அடிமையாகி, அதற்கு ஏவல் புரியும் மனிதர்கள் பிசாசுகளை நடுநடுங்க செய்யும், புனித மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால், அந்த அடிமைத் தனத்திலிருந்து விலகி இறைவன் ஒருவருக்கே சேவை செய்ய வேண்டுமென்று,

து : ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு : மனித குலத்தின் பகைவனாகிய பிசாசின் வல்லமையினால் பிறருக்குத் துன்பம் விளைவிக்கும் மனிதர்கள் இறைவனது, உன்னத வல்லமையை நிலைநாட்டப் போர்புரிந்து, வெற்றி கண்ட புனித மிக்கேலே! அதிதூதரின் வல்லமையை உணர்ந்து பிறர் நலம் பேணி நன்மை செய்து வாழ அருள் புரிய வேண்டுமென்று ஆண்டவரே...

து : ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு : உடல் நோயாலும், மனநோயாலும் அவதிப்படும் உமது மக்களுக்கு வல்லமை படைத்த வானவர் படைத்தலைவர் புனித மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால், உள்ளும், புறமும் முழுநலம் அளித்து ஆசீர் அருள வேண்டுமென்று ஆண்டவரே..

து : ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு : பிசாசின் ஏவுதலால் சித்தம் சிதறி நிற்கும் உமது மக்கள் புனித மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால் சித்தம் தெளிந்து, நல்லறிவு பெற்று, உண்மையைக் கடைப்பிடித்து வாழ அருள்புரிய வேண்டுமென்று,

து : ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு : புனித மிக்கேல் அதிதூதரின் வழியாக நாங்கள் உம்மிடம் கேட்கும் எங்கள் மன்றாட்டுக்களுக்கு இரக்கமுடன் செவிசாய்த்து, எங்கள் ஆத்துமத்துக்கும், சரீரத்துக்கும் தேவையானவற்றைத் தந்தருள வேண்டுமென்று,

து : ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

மு : சிலுவையில் தொங்கிய உம் திருச்சுதனைப் பார்த்து எங்கள் துன்பங்களை நல்மனதுடன் ஏற்று, அதனால் பலன் பெற்று இன்பமுடன் வாழ அருள்புரிய வேண்டுமென்று,

து : ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

(தங்களின் தேவைகளுக்கு உறுதியோடு வேண்டிக்கொள்ளவும்)

மு : எல்லாம் வல்ல இறைவா! மனுக்குல மீட்பரே! இறைவனுக்கு நிகர் யார்? என்ற போர்க்குரலெழுப்பி, உமது மேலான மகிமைக்காய்ப் போர்புரிந்து, பிசாசின் கொட்டத்தை அடக்கிய புனித மிக்கேல் அதிதூதரின் மன்றாட்டினால் எங்களுக்கு வரும் துன்பங்களிலிருந்து எங்களை விடுவித்து, எங்களது உள்ளத்திலும் உடலிலுமுள்ள நோய்களைப் போக்கி நாங்கள் உம்மையே என்றும் வாழ்த்தி உமதன்பில் நிலைத்திருக்கச் செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாய் உம்மைத் தாழ்மையாய் மன்றாடுகிறோம்.

து : ஆமென்.

**செபிப்போமாக :**

எல்லாம் வல்ல இறைவன் நமக்கருளிய ஆன்ம சரீர நன்மைகளுக்காகத் தாழ்மையுடன் மன்றாடுவோம்.

மு : படைப்புகளின் சிகரமாக மனிதனைப் படைத்து அழியாத ஆன்மாவை அவனுக்களித்தது, உமது வாழ்வில் அவன் பங்கு கொள்ள அருள் செய்ததற்காக,

து : ஆண்டவரே! நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம்.

மு : பாவத்தினால் உழலும் மனிதனை மீட்க உம் மக்களாக்கியதற்காக,

து : ஆண்டவரே...

மு : ஆன்ம சரீர ஆபத்துக்களிலிருந்து உமது பரிவிரக்கத்தால் எங்களைக் காப்பாற்றியதற்காக,

து : ஆண்டவரே...

மு : உடல் நோயாலும், மனநோயாலும் வருந்திய எங்களுக்கு ஆறுதல் அளித்து குணப்படுத்தியதற்காக,

து : ஆண்டவரே...

மு : எங்கள் துன்பங்களையும், வேதனைகளையும் உமக்காக

அன்புடன் ஏற்றுக்கொள்ள பொறுமையும் தைரியமும் அளித்ததற்காக,

து : ஆண்டவரே...

மு : நாங்கள் உமது அன்பையும், ஆதரவையும் உணர அருள் புரிந்ததற்காக,

து : ஆண்டவரே...

மு : புனித மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலால் நாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக,

து : ஆண்டவரே...

(ஒவ்வொருவரும் தாங்கள் பெற்ற தனி நன்மைகளை, நன்றியுடன் நினைவு கூறவும்)

மு : எல்லாம் வல்ல இறைவா! அனைத்தையும் அன்பினால் ஆள்பவரே! புனித மிக்கேல் அதிதூதரின் வேண்டுதலினால் நாங்கள் பெற்றுக்கொண்ட சகல நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். நாங்கள் என்றுமே உம்மைப் போற்றி உமக்குகந்த மக்களாக வாழக்கிருபை செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து வழியாக - உம்மை...

ஆண்டவரே! உடல் நோயால் வருந்தும் உமது ஊழியரைப் பாரும். நீர் படைத்த ஆன்மாக்களுக்கு ஆறுதல் தாரும். நாங்கள் துன்பங்களிலிருந்து தூய்மை அடைந்து, உமது இரக்கத்தினால் விரைவில் குணம் அடையும்படி அருள்புரிவீராக! எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரால். ஆமென்.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து நம்மைப் பாதுகாக்க நம் நடுவிலும், நம்மைக் காப்பாற்ற நமக்குள்ளும், நமக்கு வழிகாட்ட நமக்கு முன்னும், நமக்கு பாதுகாவலாயிருக்க நமக்குப்

பின்னும், நம்மை ஆசீர்வதிக்க நம் மேலும் இருக்க அதிதூதர் புனித மிக்கேல் வழியாக வேண்டுகிறோம். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே - ஆமென்.

## தூய சிலுவையின் ஆயுதத்தால் பிசாசின் தந்திரங்களை செயிக்கிற செபம்

யூதா சந்ததியிலும், தாவீதின் கோத்திரத்திலும் பிறந்து, சிங்கத்தை செயித்த தானியேல் தீர்க்கத்தரிசியும், ஆண்டவருடைய சுதனும், யூதருக்கு அரசருமாகிய இயேசு நசரேன் எனும் திருப்பெயர் கொண்ட திருச்சிலுவை இதோ ✠ சத்துராதிகளுடைய கூட்டங்களே நீங்கள் பின்னிட்டு ஓடிப்போங்கள். ஆண்டவரே, ஆசீர்வதித்து என்னைக் காப்பாற்றி, உமது தரிசனத்தை எனக்குக் காட்டும். என் பேரில் இரங்கி, உமது திருமுகத்தை எனது பேரில் திருப்பி, எனக்கு சமாதானத்தை கட்டளையிடும். கிறிஸ்து நாதராகிய அரசே! சமாதானத்தோடு என்னிடம் வாரும். தேவரீர் தேவனாயிருந்து மனிதனானீர். யூதரின் அரசராகிய இயேசுவே, வார்த்தையானவரே, மாம்சமாகிய எங்களோடு வாசமாயிருந்தீர். உமது அளவற்ற இரக்கத்தினாலேயும், உமது தயாளம் பொருந்திய கிருபையினாலேயும், தூய கன்னிமரியினிடத்தில் நின்று பிறந்தவரே! முத்திப் பேறுபெற்ற உமது தாயாருடையவும், சகல வான் தூதர்களுடையவும் தலைமை அப்போஸ்தலர் தூய இராயப்பருடையவும், அருளப்பர், மத்தேயு, மாற்கு, லூக்கா, சின்னப்பருடையவும் மன்றாட்டுக்களை ஏற்று எமக்கு அருள்புரியும். பிசாசின் தந்திர வலையின் நின்று காத்திட தூய மிக்கேலை எமக்கு உதவியாய் அனுப்பியருளும். முடிவில் ஒருநாள் உம் திருவடிகளை பரத்தில் பணிந்திட எமக்கு அருள்புரியும்.

பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே, - ஆமென்.